RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1941

OPEN ACCESS

# ஆற்றுப்படை நூல்கள் காட்டும் அறக்கோட்பாடுகள்

ச. பாரதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சி.எம்.எஸ் அறிவியல் மற்றும் வணிகவியம் கல்லூரி, கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு, இந்தியா

# Ethical principles shown by the Aatruppadai Texts

S. Bharathi [a, *]

[a] Department of Tamil, CMS College of Science and Commerce, Chinnavedampatty, Coimbatore-641049, Tamil Nadu, India

* Corresponding Author: vssbharathi25@gmail.com

Received: 09-09-2022
Revised: 16-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The Sangam literature, Ettutthokai, and Pathupaattu are the books that highlight the antiquity of Tamil and the pride of Tamils together. This article illustrates the ethics shown by the Aatruppadai books of the Pathupaattu hymns. The word 'Aaru' is interpreted by scholars to mean 'way' or 'righteousness'. 'Aatrupaduthutthuthal (Counseling) is guiding or directing someone who knows or does not know. This review article conveys the message that Nakkiran worshipped Lord Muruga in the six houses in Thirumurukaattrupadai which is found first in the Aatrupadai texts, and attained his virtues such as grace, love, knowledge, etc. Moreover, this article shows that in the books of Porunar Aatrupadai, Sirupanatrupadai, Perumpanattrupadai, and Kootharaattrupadai, the kings ruled with morals, welcomed the poets who came to him and treated them with clothes, food, etc.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார். ஔவையார் அந்த மானிடப் பிறப்பானது அவரவர் செய்த நல்வினை, தீவினை இரண்டிற்கும் ஏற்பவே அமையும் என்பது அபிராமி பட்டரின் கருத்து ஏனைய நீதி நூல்களும் பக்தி நூல்களும் இதனையே நமக்கு வலியுறுத்திக் கூறுகின்றன. இவ்வாறு ஒருவருடைய பிறப்பை நிர்ணயிப்பது அவரவர் செய்த வினைகளே என்பது உணர்த்தப்படுகிறது. நல்ல பிறப்பிற்கு காரணமான நல்வினைக்கு அடிப்படையாக அமைவது அருள், அன்பு, அறிவு, ஈதல் போன்ற அறச்செயல்கள் ஆகும். அறம் செய்வதால் வருவதே உண்மையான இன்பம் என்று தெய்வப்புலவரும் கூறியுள்ளார்.

இத்தகைய அறங்களை எல்லாம் அன்றே கடைபிடித்து வாழ்ந்தவர்கள் நம் சங்கத்தமிழ் மக்கள் சங்க இலக்கியமான பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை நூல்கள் அறக்கோட்பாடுகளை மிகுதியாகக் கொண்டுள்ளது. சங்ககால மன்னர்களும் மக்களும் அறத்தோடு வாழ்ந்த வாழ்வை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## அருளறம்

ஆற்றுப்படை நூல்களுல் முதலாவதாக அமையும் திருமுருகாற்றுப்படை அருளறத்தை மக்களிடம் எடுத்துக்கூறுகிறது. திருபரங்குன்றம் பகுதியில் அழகிய முருகனின் தோற்றப் பொலிவினையும் திருப்பரங்குன்ற இயற்கை அழகையும் வியந்து போற்றுகிறார். நக்கீரர்.

“சேவடி படரும் செம்மல் உள்ளமொடு

நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்

செலவுந் நயந்தனை யாயின் பலவுடன்

நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே”

என்று பாடுகிறார் (Swaminatha Iyer, 2008). அதாவது முருகனின் செவ்விய திருவடிகளை நினைத்து மேன்மையான மனத்தோடு இம்மையில் நல்வினைகளை விடாது நீ. செய்யும் கொள்கையினால் உனது நாட்டினின்றும் நீங்கி, முருகப் பெருமான் விரும்பி எழுந்தருளிய இடத்தின் கண் செல்வாய் நீ விரும்பினையானால் வீடு (முக்திப் பேறு) உரிய நற்குணங்கள் பலவும் ஒருங்கே வாய்க்கப் பெறுவாய், நீ மனத்தில் நினைத்த இனிய விருப்பம் கைகூடும். அது மட்டுமல்லாமல் நீ இன்னும் நினைத்த காரியங்கள் எல்லாம் நல்வினைப் பயனால் இப்பொழுதே அடைவாய். என்கிறார். மக்கள் முதலில் இறைவனின் அருளைப்பெற்று மற்ற அறங்களையும் வாழ்வில் கடைபிடித்து வாழ வேண்டும் என்பதே அவரது நோக்கமாகக் காணப்படுகிறது. இக்கருத்தையே சமய நூல்களும் எடுத்துக் கூறுகிறது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

“இறைவனை அடைக்கலம் புகுந்து அவனருளைப்பெற அழைக்கும் அதே வேளையில் வாழ்வினை அறநெறியில் நடத்திச் செலுத்துவதற்கு உதவும் வகையில் அறிவுரை பகர்தலும் சமய நூல்களின் நோக்கமாகும்” அருளின் பெருமையை காரைக்கால்லமையார் அற்புத்திருவந்தாதியில் பின்வரும் பாடம் மூலம் விளங்கிறார் (Sivagami, 2005).

“அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்

அருளே பிறப்பறுப்ப தானால் அருளாலே

மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே

எப்பொருளு மாவ தெமக்கு னெஞ்ஞான்றும்" (Swaminatha Iyer, 2008)

## அன்பும் அறிவும்

மனிதப் பண்புகளுக்கு அடிப்படையாக அமைவது அன்பு அறநெறிகளுக்கும் அடிப்படை அன்பே. எனலாம். இதனையே திருக்குறள்,

“அறத்திற்கே அன்புசார் பென்ப’ அறியார்

மறத்திற்கும் அஃதே துணை”

அறத்திற்கு ஆதாரமாக விளங்குவது அன்பு (வீரத்திற்கும் அதுவே என்கிறது (Parimelalhagar, 2001). ஆறறிவு படைத்த மனிதர்களிடம் மட்டுமல்லாது தாவரம் பறவை விலங்குகள் இடத்திலும் அன்பு கொண்டவர்கள் நம் முன்னோர்கள் என்பதைச் சங்கப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆற்றுப்படுத்துதலுக்கு ஆதராமாக இருப்பதும் அன்பு. மன்னர்கள் புலவர்களை ஆதரித்தற்க்கும் புலவர்கள் மற்றொரு புலவரை ஆற்றுப்படுத்தியதற்கும் அன்பே அடிப்படை.

"முகத்தான் அமர்தினிது நோக்கி அகத்தானாம்

இன்சொ லினதே அறம்"

முகம் மலர்ந்து இனிமையாகப் பார்த்து மனம் விரும்பி இனிய சொற்களைப் பேசுவதே அறம். எனப்படும் என்கிறார் (Parimelalhagar, 2001). திருவள்ளுவர் இத்தகைய பண்பு பொருநர் ஆற்றுப்படையில் கரிகால் வளனிவனிடம் இருந்ததைப் பின்வரும் பாடல்வரிகள் வெளிப்படுத்துகின்றன.

"ஈற்று ஆ விருப்பின் போற்றபு நோக்கிலும்"

பசுவானது தனது கன்றை எவ்வாறு அன்போடு பார்க்குமோ அதைப்போல கரிகாற் சோழன் தன்னிடம் வரும் பொருநனை அன்போடு விரும்பி வரவேற்றதை அறிய முடிகிறது. மேலும் அவரது ஆட்சிச் சிறப்பைப் பின்வரும் பாடல்வரிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2008).

"ஒரு குடையான் ஒன்று கூறப்

பெரிதாண்ட பெருங்கேண்மை,

அறனொடு புணர்ந்த திறன் அறிசெங்கோல்

அன்னோன் வாழி, வெல்வேற் குரிசில்"

கரிகாற்சோழன் உலகத்தை ஒரு குடையில் கீழ் வைத்து ஆண்டவன் குடி மக்களின் பால் குறையாத அன்பு கொண்டவன், அறம் கூறும் நூல்களை அறிந்து அம்முறையைப் பின்பற்றி ஆட்சி புரிந்தவன் என்று காரிகால மன்னனின் அறத்தோடு கூடிய ஆட்சியைப் பெருமையாகப் பாடுகிறார் முடத்தாமக் கண்ணியார் (Swaminatha Iyer, 2008).

சிறுபாணாற்றுப்படையில் நல்லியக் கோடனின் குணங்களைக் குறிப்பிடும் நல்லூர் நத்தத்தனார் தலைசிறந்த அறத்திற்கு காரணமாக விளங்கும் செய்ந்நன்றியதல் முதலான பண்புகள் ஒருங்கே அமைந்ததைப் பின்வரும் பாடல்வரிகளால் குறிப்பிடுகிறார்.

"செய்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்

இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்

செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த

அஞ்ச்சினர்க்கு அளித்தாலும் வெஞ்சினம் இன்மையும்

ஆண்அணி புகுதலும், அழிபடை தாங்கலும்

வான்மீக் கூற்றத்து வயவர் ஏத்த

கருதியது முடித்தாலும், காமுறப் படுதலும்

ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்

அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த

அறிவுமடம் படுதலும் அறிவு நன்கு உடைமையும்

வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்"

"நல்லியக்கோடன் அறிஞர் மறவர், பெண்கள்"

புலவர்கள் என அனைவராலும் பாரட்டபட்டமைக்கு காரணம் அவரிடம் அமைந்த செய்ந்நன்றி அறிதல் சிற்றினம் சேராதிருத்தல் அறிவு, முதலான அறப்பண்புகளே என்பது மேற்கண்ட பாடல்வரிகள் மூலம் அறிய முடிகிறது (Swaminatha Iyer, 2008).

பெரும்பாணற்றுப் படையில் தொண்டையான் இளந்திரையினின் ஆட்சித் சிறப்பைக் கூறும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் மன்னன் அறத்தை நிலை திருத்தி செங்கோலாட்சி செய்ததைப் பின்வரும் பாடல் வரிகள் மூலம் எடுத்துக் கூறுகிறார்.

"முரசு முழங்கு தானை மூவருள்ளும்

இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்

வலம்புரி அன்ன, வசை நீங்கு சிறப்பின்

அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்"

கடலில் பிறக்கும் சங்குகளில் வலம்புரிச் சங்குகளையே இந்த உலகம் புகழும் அதைப்போல சேர, சோழ, பாண்டிய மன்னர்களுள் மிகுதியாகப் புகழப் பட்ட மன்னன் சோழ மன்னன் மரபில் வந்த தொண்டைமான் இளந்திரையன் இத்தைகைய புகழுக்குக் காரணமாக அமைந்தது அறத்துடன் கூடிய நல்லாட்சி என்பதைப் பின்வரும் பாடல்வரிகள் நமக்கு உணர்த்துகின்றன (Swaminatha Iyer, 2008).

"அத்தம் சொல்வோர் அலறத் தாக்கிக்

கைப்பொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கைக்

கொடியோர் இன்று அவன் கடியுரை வியன்புலம்

உருமும் உரறது அரவும் தப்பா

காட்டுமாவும் உறுகன் செய்யா வேட்டாங்கு

அசைவுவழி அசைஇ நசைவுழித் தாங்கிச்

சென்மோ இரவல சிறக்க நின் உள்ளம்"

வழியிடையில். கயவர் பயம் இல்லை, அங்கு இடிகூட இடித்து துன்பம், தரும், தொழிலைச் செய்யாது, காட்டு விலங்குகளும் யாருக்கும் வருத்தம் செய்யாது அதனால் அந்நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ்கின்றனர். என்று தொண்டைமான் இளந்திரையனின் அறத்தோடு கூடிய ஆட்சியைச் சிறப்பிக்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார் (Swaminatha Iyer, 2008).

## பசிப்பிணி ஒழிப்பு

மனிதனின் அடிப்படைத் தேவையாக விளங்குவது உணவு,உடை,உறைவிடம், ஆகும். இதில் முதன்மையாகத் திகழ்வது உணவு ஆகும். ஒருவருக்கு அடிப்படைத் தேவைகள் கிடைக்காத நிலைக்கு முக்கியக் காரணமாக விளங்குவது வறுமை ஆகும். வறுமை என்னும் ஒரு துன்பம் வந்தால் அதனோடு பலவகைத் துன்பங்களும் வந்து சேரும் வறுமையால் ஏற்படக் கூடிய பசித்துன்பத்தைக் களைவதே தலையாய அறம் என்று இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன.

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

தனக்குக் கிடைத்தவற்றைப் பிற உயிர்களுக்கும் தந்து பகுத்துண்டு வாழ்வது (Parimelalhagar, 2001). நீதி நூல்கள் கூறுகின்ற அறங்களில் எல்லாம் சிறந்தது என்று திருக்குறளும்,

“யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி"

நாம் உண்ணும்போது பிற உயிர்களுக்கு உணவளித்து உண்ண வேண்டும் என்று திருமந்திரமும் எடுத்துக் கூறுகின்றன (Swaminatha Iyer, 2008). அதுவே தலைசிறந்த அறம் என்றும் கூறுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை பசிப்பிணி ஒழிப்பதே காப்பிய அறமாகக் கொண்டுள்ளது என்பதை

“அறம் எனப்படுகிறது யாது? எனக் கேட்பின்

மறவாது இது கேள் மண் உயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்"

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்க"

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. சிந்தாமணியிலும் மணிமுடி சூடிய சீவகன், நாட்டு மக்களை வாழ்த்தும் போது பசியும், பிணியும் பகையும் நீங்கி வாழ்க என்று வாழ்த்துவதைக் காணமுடிகிறது (Swaminatha Iyer, 2008).

சங்ககால மன்னர்களும் தன்னை நாடிவந்த புலவர்களுக்கு உணவு உடை முதலியன வழங்கி தானும் அவர்களோடு சேர்ந்து உணவருந்தி மகிழ்ந்தமைக்கு ஆற்றுப்படை நூல்கள் சான்று பகர்கின்றன. மேலும், அரசனிடம் பரிசு பெற்றுத் திரும்பும் ஒவ்வொரு புலவரும் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று மற்றொரு புலவரை ஆற்றுப்படுத்தும் மிக உயரிய மனித நேயம் ஆற்றுப்படை நூல்களின் தனிச்சிறப்பாகும்.

பொருநர் ஆற்றுப்படையில் கரிகால வளவன் பொருநர்க்கு உணவு அளித்து உபசரித்ததைக் கூறிய பொருநன் நாங்கள் அவன் அருகே சென்று நிற்க, உண்ணுதற்கு உரிய காலம் அறிந்து.எம்மை அழைத்து கொழுத்த இறைச்சி உணவைத் திண்ணுங்கள் திண்ணுங்கள் என்று வற்புறுத்திக் கொடுத்தால் நாங்கள் தெவிட்ப் போகும் அளவுக்குத் தின்றோம். இனி வேண்டாம் என்று கூறியபோது இனிய சுவையுடைய தின்பண்டங்களைக் கொணர்ந்து அவற்றைத் தின்னும்படி கூறினான். இவ்வாறு பல நாட்கள் கழிந்த பின்

"அவிழ்ப்பதம் கொள்க என்று இரப்ப முகிழ்ந்தகை

முடிவை போகிய முரியா அரிசி"

என்று அவ்வள்ளல் பெருமான் நீவிர் சோற்றுணவும் உண்ணுவீர் என்று வேண்டிக் கொண்டமையால் இடைமுரியாத அரிசி உணவையும் நன்கு பொறிக்கப்பட்ட கறிகளையும் பிறவற்றையும் கழுத்து வரையில் வந்து நிரப்புமாறு உண்டோம் என்று பொருநன் மகிழ்ச்சியோடு கூறுவதாக முடத்தாமத் கண்ணியார் பாடுகிறார் (Swaminatha Iyer, 2008).

மூவேந்தர்கள் கடையெழுவள்ளல்களைப் போல வள்ளல் தன்மை கொண்டவர்களாக ஒய்மா நாட்டு நல்லியக் கோடனை நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் பாடுகிறார்.

"பனிவரை மார்பன், பயந்த நுண்பொருட்

பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்

வான்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த

இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து

விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி"

அர்ச்சுனனுக்குத் தமையன் ஆகிய வீமன் எழுதி அருளிய மடைநூல் விதியின்படி சமைத்த பல்வேறு சுவையுடைய அடிசிலை பொன்னால் ஆன உண்கலத்தில் நீவீர் விரும்பியவற்றை கொடுத்து தானே முன்நின்று தன்னை நாடி வந்த பாணார்களை உண்ணச் செய்யும் மிக உயர்ந்த உள்ளம் உடையவனாக நல்லியக்கோடன் விளங்கியதை உணரமுடிகிறது (Swaminatha Iyer, 2008).

கூத்தராற்றுப் படையின் தலைவன் நன்னன் சிறந்த வீரன் புலவர்களுக்குப் பொருள் கொடுத்துத் தமிழை வளர்த்தவன் அவனுடைய அவைக்கலத்தில் நல்லோரும் சிறந்த கல்வியும் அறிவும் உடைய பலர் எப்போழுதும் குழுமியிருந்தனர் புலவர்களுக்கு பரிசில் கொடுத்துக் கொண்டே இருக்கும் இயல்புடைவயன் பருவ காலத்தில் மழைபெய்த மேகம் மீண்டும் மழை பெய்து கொண்டேயிருப்பது போல அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பான் என்று நன்னனின் நற்பண்புகளையும் கொடைத் தன்மையையும் புகழ்ந்து பாடுகிறார்.பெருங்கௌசிகனார்.

“இறைகாக்கும் வையகமெல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின்”

என்ற குறளானது அரசன் இந்த உலகை எல்லாம் காக்கிறான் (Parimelalhagar, 2001). அவ்வரசனை நீதிநெறி தவறாத அவனது ஆட்சி காப்பற்றும் என்ற கருத்தை விளக்குகிறது. இதற்கு உதாரணமாக விளங்குவது சங்க மன்னர்களின் ஆட்சி என்பதை ஆற்றுப்படை நூல்கள் மெய்ப்பிக்கின்றன.

‘மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி” என்பதற்கிணங்க நம் நாட்டு மன்னனைத் தேடி வரும் பரிசிலர்களை அந்த நாட்டு மக்களும் வரவேற்று உபசரித்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல் என அந்தந்த நிலத்தில் கிடைக்கும் சிறப்பு மிக்க உணவுகளைக் கொடுத்து மகிழ்ந்தனர்.

"மண்திணி ஞாலத்து வாழ்வோருக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்

கயக்காறு நல்லறம் கண்டனை”

என்னும் மணிமேகலை பாடல் வரிகள் அறத்திகான வரையறைகளைச் சுட்டுகிறது. இந்த உலகில் வாழ்பவர்க்கெல்லாம் உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவர் என்றும் அதுவே நல்லறம் என்றும் கூறுகிறது (Swaminatha Iyer, 2008). மேலும் உயிரினங்களுக்கு எல்லாம் உணவு, உடை இருப்பிடம் அளிப்பதன்றி வேறு அறமென எதனையும் ஆன்றோர்கள் கண்டதில்லை. என்றும் எடுத்துக் கூறுகிறது.சாத்தனாரின் இந்த அறங்களை அன்றே சங்க மன்னர்களும் மக்களும் கடைபிடித்து வாழ்ந்தனர் என்பதை ஆற்றுப்படை நூல்கள் உணர்த்துகின்றன.

## முடிவுரை

மறத்திலும் அறத்தோடு ஆட்சி புரிந்தவர்கள் சங்ககால மன்னர்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் மூலம் அறிய முடிகிறது. புலவர்கள் வறுமை நிலையிலும் அறநெறி பிறழாமல் தங்களது வாழ்க்கைக்கான வழியைத் தேடிச்சென்றனர். தாம் பெற்ற செல்வத்தை பிறரும் பெற வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்தோடு மற்றவர்களையும் வழிப்படுத்தினர். மக்களும் சான்றோர்கள் காட்டிய அறவழியைப் பின்பற்றி வாழ்ந்தனர். என்ற செய்தியை ஆற்றுப்படை நூல்கள் அறிய முடிகிறது. தனிமனித மேம்பாடே சமூக மேம்பாடு என்பதை மனதில் கொண்டு அறநெறி நின்று வாழ்தலே நலம் அதுவே பிறவிப்பயனையும் தரவல்லது ஆகும்.

## References

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Sivagami, S. (2005) Thalapuranam Katturai, International Institute of Tamil Studies, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (2008) Manimegalai, U.Ve.Sa Noolaga Nilayam, Chennai, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License